ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2321/70 - 2023 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2023.03.03

*2321/70 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை தொல்லியலாளர்கள் சபை (கூட்டிணைக்கப்பட்ட) சட்டம்*

*1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை தொல்லியலாளர்கள் சபை (கூட்டிணைக்கப்பட்ட) சட்டம் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமையன்றைய 854/6 ஆம் இலக்க மற்றும் 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமையன்றைய 1901/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொல்லியலாளர்கள் சபை என்னும் பெயரின் கீழ் தயாரிக்கப்பட்ட நியதிச் சட்டவிதிக் கோவைகள் குறித்த சபையின் கட்டளைப்படி இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை தொல்லியலாளர்கள் சபை என்னும் பெயரில் தயாரிக்கப்பட்ட புதிய நியதிச் சட்டவிதிக் கோவை இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*சபையின் கட்டளைப்படி,*

**கலாநிதி றோஸ் சோழங்கஆரச்சி,**
*தலைவர்,*
*இலங்கை தொல்லியலாளர்கள் சபை.*

*தொல்பொருளியல் திணைக்களம்,*
*கொழும்பு 07,*
*2023, பெப்புருவரி 25.*

### *இலங்கை தொல்லியலாளர்கள் சபைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட புதிய நியதிச் சட்டவிதிக் கோவை*

**1.** ***(அ)*** *அதியுயர் அங்கத்தவர் ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும்போது அவர் பத்து வருடங்களுக்கு மேலாக சபையின் அங்கத்தவர் ஒருவராகவும், தொடர்ச்சியான மற்றும் இடைவிடாததுமான அங்கத்துவம் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன்,*

1A - PG 6245 — 07 (2023/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மற்றும்**

*இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள "இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் அதியுயர் அங்கத்துவத்திற்கான சுய மதிப்பீட்டறிக்கை"*(Self-assessment report for the Fellow Membership) *மற்றும் அங்கத்துவ விண்ணப்பம்* (Membership Application) *என்பவற்றை முறையாகப் பூர்த்தி செய்து குறித்த சபையில் சமர்ப்பித்திருத்தல் வேண்டும்.*

*மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒருவர் நிருவாக சபையினால் நியமிக்கப்படுகின்ற செயற்குழுவின்* (BARE)[II] *மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர் ஒரு* ***அதியுயர் அங்கத்தவராக*** *பரிந்துரை செய்யப்படுவார். பரிந்துரை நிலையின் பிரகாரம் நிருவாக சபையினால் அவருக்கு* ***அதியுயர் அங்கத்துவம்*** *வழங்கப்படும்.*

***(ஆ)*** *அங்கத்துவக் குழுவிற்கு அங்கத்தவர் ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும் போது இரண்டு வருட காலத்தினுள் சபையின் உதவி அங்கத்துவக் குழுவில் தொடர்ச்சியான மற்றும் இடைவிடாததுமான அங்கத்துவம் பெற்றிருத்தல்*

**மற்றும்**

*இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான விசேட தர பட்டம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது நிறுவனமொன்றில் தொல்லியல் தொடர்பான இரண்டு வருட கால பட்டப்பின் படிப்புப் பட்டம் அல்லது* (MA) *கலை முதுமானிப்பட்டம்,* (MSc) *விஞ்ஞான முதுமானிப் பட்டம் அல்லது வேறேதும் உயர் பட்டம் பெற்றிருத்தல்*

**அல்லது**

*இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான சாதாரண தர பட்டம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது நிறுவனமொன்றில் தொல்லியல் தொடர்பான டிப்ளோமா மற்றும் இரண்டு வருட கால பட்டப்பின் படிப்புப் பட்டங்களாகிய கலை முதுமானிப் பட்டம்* (MA), *விஞ்ஞான முதுமானிப் பட்டம்* (MSc) *அல்லது வேறேதும் உயர் பட்டம் பெற்றிருத்தல்*

**மற்றும்**

*அதியுயர் அங்கத்தவர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் தொழில் ரீதியான தொல்லியலாளராகக் கடமையாற்றி இரண்டு வருடகால அனுபவம் பெற்றிருத்தல், அத்துடன் பெற்றுக் கொண்டுள்ள அனுபவத்தினை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் தொழில் மதிப்பீட்டறிக்கை (தொல்லியலாளர்கள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள தொல்லியலாளர்கள் முன்னேற்ற மீள்நோக்கு தொடர்பான செயலாற்றுகை அறிக்கை* (Record Book for Archaeologists) *மற்றும் அங்கத்துவ விண்ணப்பம்* (Membership Application) *என்பவற்றைப் பூர்த்தி செய்து குறித்த சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒருவரை அங்கத்துவ உப குழுவின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்* ***அங்கத்துவக் குழுவின் அங்கத்தவராக*** *உட்சேர்க்கப்படுவார்.*

***(இ)*** *உதவி அங்கத்தவர் ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும் போது ஐந்து வருட காலத்தினுள் சபையில் பதிவு செய்யப்பட்ட குழுவின் அங்கத்தவராக தொடர்ச்சியான மற்றும் இடைவிடாததுமான அங்கத்துவம் பெற்றிருத்தல்*

**மற்றும்**

*இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான விசேட தர பட்டம் பெற்றிருத்தல்*

**அல்லது**

இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான சாதாரண தர பட்டம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான டிப்ளோமா பெற்றிருத்தல்

**மற்றும்**

அதியுயர் அங்கத்தவர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் தொழில் ரீதியான தொல்லியலாளராகக் கடமையாற்றி இரண்டு வருடகால அனுபவம் பெற்றிருத்தல், அவ்வாறு பெற்ற அனுபவத்தினை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் தொழில் மதிப்பீட்டறிக்கை (தொல்லியலாளர்கள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள தொல்லியலாளர்கள் முன்னேற்ற மீள்நோக்கு தொடர்பான செயலாற்றுகை அறிக்கை (Record Book for Archaeologists) மற்றும் அங்கத்துவ விண்ணப்பம் (Membership Application) என்பவற்றைப் பூர்த்தி செய்து குறித்த சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒருவரை அங்கத்துவ உப குழுவின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர் **உதவி அங்கத்துவக் குழுவின் அங்கத்தவராக** உட்சேர்க்கப்படுவார்.

**(ஈ)** பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர் ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும் போது அவர் ஐந்து வருட காலத்தினுள் சபையில் மாணவ குழுவின் அங்கத்தவராக தொடர்ச்சியான மற்றும் இடைவிடாததுமான அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன்,

இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான விசேட தர பட்டம் பெற்றிருத்தல்

**அல்லது**

தொல்லியலாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருத்தல்

**அல்லது**

மேற்குறித்த தேர்வுகள் ஆரம்பிக்கப்படும் வரை இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான சாதாரண தர பட்டம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறியில் குறைந்த பட்சம் இரண்டு பாடத்திட்டங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவை யாவும் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர் ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும் தகைமைகளாகக் கருதப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்து பதிவு செய்யப்பட்ட அங்கத்துவத்தினை எதிர்பார்க்கும் ஒருவர் தனது அங்கத்துவ விண்ணப்பத்தினை (Membership Application) முறைப்படி பூர்த்தி செய்து சபையில் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அங்கத்துவ உப குழுவின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர் **பதிவு செய்யப்பட்ட அங்கத்துவக் குழுவின் அங்கத்தவராக** உட்சேர்க்கப்படுவார்.

**(உ)** மாணவ அங்கத்தவர் ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும் போது, அவர் இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான விசேட தர பட்டம் பெற்றிருத்தல்

**அல்லது**

இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான விசேட தர பட்டத்திற்கான பாடநெறிக்குச் சேர்ந்து அதில் முதல் வருடத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் (அதனை உறுதிப்படுத்துவதற்காக குறித்த கல்விப் பிரிவின் தலைமை அலுவலரின் பரிந்துரையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

**அல்லது**

தொல்லியலாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது தேர்வில் (முதற் கட்டம்) தேர்ச்சி பெற்றிருத்தல்

**அல்லது**

*மேற்குறித்த தேர்வுகள் ஆரம்பிக்கப்படும் வரை இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொல்லியல் தொடர்பான சாதாரண தர பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்திருத்தல். இவை யாவும் மாணவ அங்கத்தவர்ஒருவரை சபைக்கு உட்சேர்க்கப்படும் தகைமைகளாகக் கருதப்படுகின்றன.*

*மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்து மாணவ அங்கத்துவத்தினை எதிர்பார்க்கும் ஒருவர் தனது அங்கத்துவ விண்ணப்பத்தினை* (Membership Application) *முறைப்படி பூர்த்தி செய்து சபையில் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அங்கத்துவ உப குழுவின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்* ***மாணவ அங்கத்துவக் குழுவின் அங்கத்தவராக*** *உட்சேர்க்கப்படுவார்.*

***(ஊ)*** *மேற்குறிப்பிட்ட எந்தவொரு அங்கத்துவக் குழுவில் உட்சேர்ப்பதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பினும், புதியதொரு அங்கத்தவராக தொல்லியலாளர்கள் சபைக்கு உட்சேர்க்கப்படும் போது, கூட்டிணைக்கப்படாத அங்கத்துவக் குழு (மாணவ, பதிவு செய்யப்பட்ட) தொடக்கம் கூட்டிணைக்கப்பட்ட அங்கத்துவக் குழு வரையான (இணைந்த, அங்கத்துவ, அதியுயர் அங்கத்துவ) அனைத்துக் குழுக்களும் முறையே, அவ்வக் குழுவின் நடவடிக்கைப் படிமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். (ஏதேனுமொரு இடைநடு அங்கத்துவக் குழுவொன்றிற்கு எவரும் உட்சேர்க்கப்பட மாட்டார்கள்.)*

***02. (அ)*** *சபையின் கூட்டிணைக்கப்படாத குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் மற்றும் மாணவ அங்கத்தவர்கள் தத்தமது பிரதிநிதித்துவத்திற்கு உரியவாறு வாக்களிக்கும் உரிமையைப் பெறுவார்கள்.*

***(ஆ)*** *சபைக்காக அல்லது குறித்த தொழிலுக்காக மகத்தான சேவைகளை ஆற்றியுள்ள ஒருவரை அங்கத்தவராக சபைக்கு உட்சேர்த்துக் கொள்ள சபையினால் முடியும். எனினும் ஒரு வருட காலத்தினுள் ஒருவருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை சபைக்கு உட்சேர்த்துக் கொள்ளலாகாது என்பதுடன், அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒருபோதும் பத்துப் பேருக்கு மேற்படலாகாது என்பதும் குறிப்பிடத் தக்கது. அத்துடன் அவர்களுக்கு சபையினால் நடாத்தப்படும் எந்தவொரு வாக்கெடுப்பின் போதும் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு கிடையாது.*

***03. (அ)*** *எந்தவொரு குழுவிற்கும் அல்லது அங்கத்துவத்திற்கும் உட்சேர்த்துக் கொள்வதற்காக சபையினால் வெளியிடப்படும் விண்ணப்பமொன்றினை, தொடர்ச்சியான கூட்டிணைந்த அங்கத்தவர்கள் மூவரின் கையொப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அதியுயர் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கும் போது, அவ்விண்ணப்பம் தொடர்ச்சியான அதியுயர் அங்கத்தவர்கள் இருவரின் கையொப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.*

***(ஆ)*** *நிருவாக சபையினால் அங்கத்துவ அட்டவணையொன்று நடைமுறைப் படுத்தப்படும்.*

***(இ)*** *அங்கத்துவத்திற்கான அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு சபைக்கு அதிகாரம் உள்ளது.*

***(ஈ)*** *சபையின் அங்கத்தவர்களது நலனோம்பு விடயங்கள் தொடர்பாக செயற்படுவதற்கும், அதற்கான நிதி திரட்டுவதற்கும் சபைக்கு அதிகாரம் உள்ளது.*

***04.*** *சபையினால் இடைக்கிடை விதிக்கப்படுகின்ற கட்டளைகளின் பிரகாரமும், சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்ட அங்கத்துவச் சான்றிதழொன்று சபையினால் அனைத்து அங்கத்தவர்களுக்கும் சபையின் உத்தியோகபூர்வ முத்திரையுடன் வழங்கப்படும். அச்சான்றிதழ் சபைக்கு உரித்தான சொத்தாக இருக்க வேண்டுமென்பதுடன், அங்கத்தவரின் மரணம் தவிர்ந்த வேறெந்த காரணத்திற்காகவும் தேவைப்படின், அவரது அங்கத்துவம் முடிவுறுத்தப்பட்டு ஏழு நாட்களுக்குள் குறித்த சான்றிதழை சபையிடம் மீளக் கையளித்தல் வேண்டும். ஏதேனுமொரு காரணத்தினால் சான்றிதழின் மூலப்பிரதி தொலைந்திருந்தால் அதற்கான பிரதியொன்றை வழங்குவதற்கும் சபைக்கு அதிகாரம் உள்ளது.*

***05.*** *எவரேனும் ஒருவர் தமது அங்கத்துவத்திலிருந்து கேட்டு விலகுவதாயின்,தமது அங்கத்துவப் பண நிலுவைகள் மற்றும் கட்டணங்கள் அனைத்தையும் செலுத்திய பின்னர் கௌரவ செயலாளரிடம் எழுத்து மூலமான அறிவித்தலைச் செய்து முடிந்ததும், அவரது அங்கத்துவம் இல்லாதொழிக்கப்படும்.*

***06.*** *கேட்டு விலகியமை காரணமாக அங்கத்துவம் முடிவுறுத்தப்பட்ட ஒருவர் மீண்டும் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவரது அங்கத்துவம் முடிவுறுத்தப்பட்டிருந்த அதே அங்கத்துவக் குழுவிற்குப் புதிய அங்கத்தவராக மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரம் சபைக்கு உள்ளது.*

**07. (அ)** நுழைவுக் கட்டணம், வருடாந்த அங்கத்துவ சந்தாக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் என்பன இந்த நியதிச் சட்டவிதிக் கோவையின் உபஅட்டவணை i இன் பிரகாரம் அமைந்துள்ளன.

**(ஆ)** கௌரவ அங்கத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் தவிர்ந்த வேறெந்த வகை அங்கத்துவத்திற்கும் உட்சேர்த்துக் கொள்வதற்காக சபையினால் தீர்மானிக்கப்படும் ஒருவர் உட்சேர்த்துக் கொள்ளப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் குறித்த வருடத்திற்கான தனது நுழைவுக் கட்டணம் மற்றும் வருடாந்த அங்கத்துவ சந்தாக் கட்டணம் என்பவற்றைச் செலுத்துதல் வேண்டும்.

**(இ)** அனைத்து அங்கத்தவர்களும் செலுத்த வேண்டிய தமது வருடாந்த அங்கத்துவ சந்தாக் கட்டணம் மற்றும் வருடாந்தக் கட்டணங்கள் யாவற்றையும் நடைமுறை வருடத்தின் ஆரம்பத்திலேயே செலுத்துதல் வேண்டும். வருடத்தில் மார்ச் மாதம் முதலாந் திகதியன்று குறித்த கட்டணங்கள் செலுத்தப்பட்டிராவிடின், கௌரவ பொருளாளர் குறித்த அங்கத்தவருக்கு நினைவூட்டற் கடிதம் ஒன்றை அனுப்புவார். நடைமுறை வருடத்தில் யூன் மாதம் முதலாந் திகதி வரை குறித்த கட்டணங்கள் செலுத்தப்படாவிடின், கௌரவ பொருளாளர் அவ் அங்கத்தவருக்கு பதிவுத் தபால் மூலம்மீண்டும் கடிதமொன்றை அனுப்புவார். அக்கடிதம் கிடைக்கப் பெற்று ஒரு மாத காலத்திற்குள் குறித்த நிலுவைகளைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவ் அங்கத்தவரது அங்கத்துவம் முடிவுறுத்தப்படும். அவ்வாறு செலுத்த முடியாமைக்கு உரிய நியாயமான காரணங்கள் இருப்பின், அக்காரணங்கள் தொடர்பாக சபை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் குறித்த அங்கத்தவருக்கு மீண்டும் அங்கத்துவம் வழங்கி உட்சேர்க்கும் அதிகாரம் சபைக்கு உள்ளது.

**(ஈ)** எவரேனும் அங்கத்தவர் ஒருவர் வயோதிபம், நோய்வாய்ப்படல், இயலாமை அல்லது வேறேதேனும் காரணங்களின் நிமித்தம் சுயமாக தனது தொழிலில் ஈடுபட முடியாதிருப்பின் அல்லது அவரால் வருமானம் ஈட்ட முடியாதிருப்பின், கோரிக்கையொன்றை முன்வைத்து சபையினால் அதனை அங்கீகரித்த பின்னர் குறித்த அங்கத்தவரின் அங்கத்துவ சந்தாப் பணத்தை முழுமையாகவோ அல்லது பகுதிகளாகவோ அறவிடப்படுவது கைவிடப்படலாம்.

**(உ)** இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் அனைத்து அங்கத்துவக் குழுக்களிலும் உள்ள அங்கத்தவர்கள் தமது 60 வயதினைப் பூர்த்தி செய்த பின்னர் வருடாந்த சந்தாக் கட்டணத்தின் அரைப்பங்கை மாத்திரம் செலுத்துதல் போதுமானது.

**08. (அ)** சபையின் அலுவலர் குழு (நிருவாக சபை) பின்வருமாறு அமையும்.

i. கௌரவ தவிசாளர்
ii. கௌரவ அண்மித்த முன் தவிசாளர்
iii. கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர்
iv. கௌரவ உப தவிசாளர்
v. கௌரவ சம செயலாளர்கள் இருவர் (2)
vi. கௌரவ பொருளாளர்
vii. கௌரவ உப பொருளாளர்

**(ஆ)** சபையின் தெரிவுக் குழுவில் தெரிவுக் குழு உறுப்பினர்கள் பதினொரு (11) பேர் உள்ளடங்குவர். நிருவாக சபையானது, குறித்த அலுவலர் குழுவையும், தெரிவுக் குழு உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

**(இ)** கௌரவ தவிசாளர், கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர் மற்றும் கௌரவ உப தவிசாளர் பதவிகளுக்காக அதியுயர் அங்கத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் மாத்திரமே தகைமை உடையவர்களாவர். எனினும் குறைந்த பட்சம் ஒரு பதவிக் காலத்தில் சபைக்கு உரியதாக சேவையாற்றியுள்ள கூட்டிணைந்த அங்கத்தவர் ஒருவர் மாத்திரமே கௌரவ உப தவிசாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவராகக் கருதப்படுவார்.

**(ஈ)** கௌரவ தவிசாளர் பதவிக்கு முந்திய வருட இறுதியில் கௌரவ சிரேஷ்ட உப தவிசாளராகக் கடமையாற்றியவரே தகைமையுள்ளவராவார். அவ்வாறான அங்கத்தவர் தனது ஒரு பதவிக் காலத்திற்கு மேல் கௌரவ தவிசாளர் பதவியை வகிக்க முடியாதிருப்பதுடன், சபையின் இரண்டு பதவிக் காலங்கள் முடிவடைந்த பின்னர் மீண்டும் அப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படலாம்.

**(உ)** குறைந்த பட்சம் சபைக்குரிய ஒரு பதவிக் காலத்தில் சேவைகளை ஆற்றியுள்ள கூட்டிணைந்த அங்கத்தவர் ஒருவர் மாத்திரமே கௌரவ சிரேஷ்ட உப தவிசாளராகத் தெரிவு செய்வதற்குத் தகைமையுடையவராவார். அவ்வாறான அங்கத்தவர் தொடர்ச்சியாக தனது ஒரு பதவிக் காலத்திற்கு மேல் கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர் பதவியை வகிக்க முடியாதிருப்பதுடன், சபையின் ஒரு பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் அப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படலாம்.

*(ஊ)* குறைந்த பட்சம் சபைக்குரிய ஒரு பதவிக் காலத்தில் சேவைகளை ஆற்றியுள்ள கூட்டிணைந்த அங்கத்தவர் ஒருவர் மாத்திரமே கௌரவ உப தவிசாளராகத் தெரிவு செய்வதற்குத் தகைமையுடையவராவார். அவ்வாறான அங்கத்தவர் தனது ஒரு பதவிக் காலத்திற்கு மேல் கௌரவ உப தவிசாளர் பதவியை வகிக்க முடியாதிருப்பதுடன்,சபையின் ஒரு பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் அப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படலாம்.

*(எ)* கௌரவ அண்மித்த முன் தவிசாளர் பதவிக்கு கடந்த பதவிக்கால வருடத்தின் இறுதியில் கௌரவ தவிசாளர் பதவி வகித்தவரே தகைமை உடையவராவார்.

*(ஏ)* குறைந்த பட்சம் சபைக்குரிய ஒரு பதவிக் காலத்தில் சேவைகளை ஆற்றியுள்ள கூட்டிணைந்த அங்கத்தவர் ஒருவர் மாத்திரமே கௌரவ சம செயலாளர், கௌரவ பொருளாளர், கௌரவ உப பொருளாளர் பதவிகளுக்குத் தெரிவு செய்வதற்குத் தகைமையுடையவர்களாவர். அவ்வாறான அங்கத்தவர் தனது ஒரு பதவிக் காலத்திற்கு மேல் அப்பதவியை வகிக்க முடியாதிருப்பதுடன், சபையின் ஒரு பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் அப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படலாம்.

*(ஐ)* நிருவாக சபையின் கௌரவ தவிசாளர், கௌரவ அண்மித்த முன் தவிசாளர், கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ சம செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ உப பொருளாளர் பதவிகளுக்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் சபையின் இரண்டு பதவிக் காலங்களுக்கு தாம் வகிக்கும் பதவியில் வாக்கெடுப்பு இன்றியே தொடர்ச்சியாக பதவி வகித்திருக்க முடியும்.

*(ஓ)* நிருவாக சபையின் ஒரு பதவிக் காலம் என்பது வருடாந்த மகா சபைக் கூட்டங்கள் இரண்டிற்கு இடைப்பட்ட காலமாகும்.

***09. (அ)*** அதியுயர் அங்கத்துவக் குழுவின் அல்லது அங்கத்துவக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் ஒரு வருட காலத்திற்கு மாத்திரமே ஆராய்ச்சி உப குழுவின் தவிசாளராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமை உடையவராவார். அவ்வாறான அங்கத்தவர் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் அப்பதவியை வகிக்க முடியாதென்பதுடன், மேலும் ஒரு வருடம் கழிந்த பின்னர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம்.

*(ஆ)* ஆராய்ச்சி உப குழுவின் தவிசாளர் உத்தியோகபூர்வமாக நிருவாக சபையின் அங்கத்தவரும் ஆவார்.

***10. (அ)*** நிருவாக சபையானது, அலுவலர் குழாம் உள்ளிட்ட பத்தொன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வங்கத்தவர்களில் ஒருவர் ஆராய்ச்சிக் குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

*(ஆ)* நிருவாக சபையின் அங்கத்தவர்களில் இருவர் உதவி அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மூவருக்கு மேற்படாத எண்ணிக்கையிலான கூட்டிணைக்கப்படாத அங்கத்தவர்களும் இருத்தல் வேண்டும்.

***11. (அ)*** முன்னிலை அலுவலர்கள் மற்றும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் எட்டுப் பேர் தெரிவு செய்யப்படும்போது வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்பவர்கள் கூட்டிணைந்த அங்கத்தவர்கள் மாத்திரமே.

*(ஆ)* கூட்டிணைந்த அங்கத்தவர் ஒருவர், மேற்குறிப்பிட்ட 11(அ) வில் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக எவரேனும் கூட்டிணைந்த அங்கத்தவரை நிருவாக சபையின் உறுப்பினராக சேவையாற்றுவதற்கு முன்மொழிவை முன்வைக்கும் போது, குறித்த முன்மொழிவு அல்லது வழிமொழிவு என்பவற்றிற்கான எண்ணிக்கையை ஆகக்கூடியது இரண்டு அங்கத்தவர்களுக்கு மட்டுப்படுத்துதல் வேண்டும்.

***12. (அ)*** பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கும் மாணவ அங்கத்தவர்களுக்கும் நிருவாக சபையில் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக குறைந்த பட்சம் ஒரு பதிவு செய்யப்பட்ட அங்கத்தவரையும், ஒரு மாணவ அங்கத்தவரையும் தெரிவு செய்வதற்கு உரித்துடையவர்களாவர்.

*(ஆ)* மேற்குறித்த அங்கத்தவர்களுக்கு நிருவாக சபைக் கூட்டங்கள் தொடர்பாக அறிவிப்பதற்கும், அதில் பங்கேற்பதற்குமான உரித்து இருக்க வேண்டுமென்பதுடன், அங்கு கூட்டிணைந்த பதவிகளுக்காக வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட மாட்டாது. அவர்கள் எந்தவொரு ஒழுக்காற்று விசாரணையிலோ அல்லது அவை தொடர்பான எந்தவொரு கலந்துரையாடலிலோ அல்லது நேர்முகமாகவோ பங்குபற்றுதலாகாது.

**13.** நிருவாக சபையின் அங்கத்தவர் ஒருவருடைய சபை அங்கத்துவம் முடிவுறுத்தப்பட்டிருப்பின் அல்லது அவர் கௌரவ தவிசாளரின் பெயருக்கோ அல்லது கௌரவ செயலாளரின் பெயருக்கோ எழுத்து மூலமாக தமது கேட்டு விலகல் தொடர்பான விருப்பத்தை அறிவித்திருந்தால் அவ் அங்கத்தவரின் பதவிக் காலம் முடிவுறுத்தப்படலாம்.

**14. (அ)** நிருவாக சபையின் கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ சம செயலாளர், கௌரவ பொருளாளர் பதவிகளிலுள்ள ஒருவர் மரணித்தால் அல்லது பதவியைக் கைவிட்டிருந்தால், அடுத்து நியமிக்கப்படவிருக்கும் நிருவாக சபையின் பதவிகளை ஏற்றுக் கொள்ளும் காலம் வரை உரியவாறு கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ சம செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோரால் குறித்த வெற்றிடம் நிரப்பப்படல் வேண்டும்.

**(ஆ)** நிருவாக சபையின் அங்கத்தவர் ஒருவர் மரணித்தால் அல்லது பதவியைக் கைவிட்டிருந்தால் 14(அ) வில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படும் போது அல்லது வேறேதேனும் காரணத்தினால் வெற்றிடம் உருவாகியிருந்தால், குறித்த பதவிக்கான அவ்வெற்றிடத்திற்கு சபையினால் அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

**15. (அ)** நிருவாக சபையினால் குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாவது கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதுடன், சபையின் அடுத்த கூட்டத்திற்கான திகதியை முன்கூட்டியே குறித்து ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் அறிவிக்கப்படல் வேண்டும்.

**(ஆ)** தவிசாளர் கட்டளை பிறப்பித்தால் அல்லது நிருவாக சபை அங்கத்தவர்கள் ஆறு பேரின் கையொப்பங்களுடன் எழுத்து மூலமான கோரிக்கையை முன்வைக்கும் சந்தர்ப்பமொன்றில், தவிசாளரால் நிச்சயித்து அறிவிக்கப்பட்டுள்ள அல்லது எழுத்து மூலமான கோரிக்கையில் நிச்சயித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தொடர்பாக கருத்திலெடுத்துக் கொள்ள வேண்டியிருப்பின், விசேட சபைக் கூட்டமொன்று கௌரவ செயலாளரால் கூட்டப்பட வேண்டும். அவ்வாறான கூட்டமொன்றை நடாத்தும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பவற்றையும், கூட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் குறைந்த பட்சம் 48 மணித்தியாலங்களுக்கு முன்னராக அறிவிக்கப்படல் வேண்டும்.

**(இ)** நிருவாக சபைக் கூட்டமொன்றிற்கான குழும எண்ணிக்கை (கூட்டிணைக்கப்படாத அங்கத்தவர்கள் தவிர்ந்த) ஆறு அங்கத்தவர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

**(ஈ)** நிருவாக சபைக் கூட்டங்களுக்காக தெளிவான காரணங்கள் இல்லாமலும், அது பற்றி அறிவிக்காமலும் தொடர்ச்சியாக மூன்று கூட்டத் தொடர்களுக்கு சமுகமளிக்கத் தவறும் அங்கத்தவர்கள் சபையிலிருந்து நீக்கப்படுவதுடன், அவ்வாறான அங்கத்தவர்கள் நான்கு வருடங்களுக்கு சபையின் எந்தவித பதவிகளையும் வகிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டார்கள்.

**(உ)** தொல்லியலாளர்கள் சபைச் சட்டத்தின் 10 ஆம் இலக்கப் பிரிவின் பிரகாரம் மற்றும் நிருவாக சபையின் தற்றுணிபின் படியும் சபையின் நிருவாக நடவடிக்கைகளை இலகுவாக்கிக் கொள்ளும் பொருட்டு நிருவாகச் செயலாளர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் நிருவாக சபைக்கு உள்ளது.

**16. (அ)** நிருவாக சபையின் சபைத் தவிசாளர் பதவி மற்றும் அண்மித்த முன் தவிசாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக தகைமையுள்ள எவரேனுமொரு கூட்டிணைந்த அங்கத்தவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக இரண்டு கூட்டிணைந்த அங்கத்தவர்களால் குறித்த வேட்பாளர் மனுவைச் சமர்ப்பிக்க முடியும்.

**(ஆ)** எந்தவொரு பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இருவராலோ அல்லது எந்தவொரு மாணவ அங்கத்தவர் இருவராலோ முறையே பதிவு செய்யப்பட்ட அல்லது மாணவ அங்கத்தவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக சட்டத்தின் 12(அ) என்னும் பிரிவின் பிரகாரம் வேட்பாளர் மனுவைச் சமர்ப்பிக்க முடியும்.

**(இ)** குறித்த வேட்பு மனுக்கள் எழுத்து மூலமானதாக இருக்க வேண்டுமென்பதுடன், முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அதில் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். அத்துடன் வருடாந்த அங்கத்துவ சந்தாப் பணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் இருப்பின் அவை யாவும் செலுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துதலும் வேண்டும். மேலும் யாப்பின் பிரகாரம் குறித்த வேட்பாளர் தாம் தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமையுடையவர் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் நிருவாக சபைக்குரிய சேவைகளை ஆற்றுவதற்கு சம்மதம் தெரிவிப்பதாகவும் கையொப்பமிடப்பட்ட கூற்று ஒன்றினைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*(ஈ)* தெரிவு செய்யப்படுவதற்காக குறைந்த பட்சம் வருடாந்த மகா சபைக் கூட்டம் நடாத்தப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்பாககுறித்த வேட்பு மனுக்களுக்குரிய அங்கத்தவரால் கௌரவ சம செயலாளரிடம் மேற்குறித்த ஆவணங்களைக் கையளித்தல் வேண்டும்.

*(உ)* நிருவாக சபையினால் அதன் இறுதிக் கூட்டத் தொடரில் தவிசாளர், அண்மித்த முன் தவிசாளர் பதவிகள் தவிர்ந்த சபையின் ஒவ்வொரு பதவிகளுக்காகவும் ஒவ்வொரு வேட்பாளரை பெயர் குறித்து முன்மொழிந்தும், வழிமொழிந்தும் வெளியிட முடியும். குறித்த யாப்பின் பிரகாரம் வேட்பாளர் தாம் தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமையுடையவர் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் நிருவாக சபைக்குரிய சேவைகளை ஆற்றுவதற்கு சம்மதம் தெரிவிப்பதாகவும் கையொப்பமிடப்பட்ட கூற்றினை அவ்வாறு பெயர் குறிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக சமர்ப்பித்திருந்தாலன்றி குறித்த வேட்பு மனு நிராகரிக்கப்படும்.

**17. *(அ)*** வருடாந்த மகா சபைக் கூட்டம் தொடர்பாக அறிவிப்பதற்கு முன்னர் சட்டத்தின் 16ஆம் பிரிவிற்கிணங்க வேட்பு மனுவைச் சமர்ப்பித்திருக்கும் அனைத்து வேட்பாளர்களினது பெயர்களும் அட்டவணைப்படுத்தப்படல் வேண்டும்.

*(ஆ)* நடைமுறை வருடத்திற்கு உரியவாறு செலுத்தப்பட வேண்டிய அங்கத்துவ சந்தாப் பணத்தினை ஏற்கெனவே செலுத்தியிராவிடின், எந்தவொரு அங்கத்தவரும் தனது வாக்கினை அளிக்கும் உரிமையை இழந்து விடுவார்.

*(இ)* அலுவலர் குழுவினைத் தெரிவு செய்தலானது, வருடாந்த மகா சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். இரகசிய வாக்கெடுப்பு முறையிலேயே தமது வாக்கினை அளிக்க முடியும்.

*(ஈ)* வாக்குச் சீட்டுக்கள் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல், வாக்குப் பெட்டி விநியோகம், வாக்குகள் எண்ணப்படல் போன்ற நடவடிக்கைகள் சிரேஷ்ட உப தவிசாளரின் பொறுப்பாக இருப்பதுடன், ஏதேனுமொரு வேட்பு மனுவின் செல்லுபடித் தன்மை, எவரேனும் வேட்பாளரின் தகைமை, வாக்கினை அளிக்கும் அங்கத்தவர்களின் உரிமை போன்ற விடயங்கள் தொடர்பாக அவர் எடுக்கும் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும். பதவிகளுக்கான வேட்பாளர் அல்லாத அதியுயர் அங்கத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் ஐந்து பேருக்கு மேற்படாதவாறான எண்ணிக்கையினரை அவர் தமது உதவிகளுக்காக நியமித்துக் கொள்ள முடியும்.

*(உ)* ஒரு பதவிக்காக மேலும் ஒரு மேலதிகமான வேட்பாளரை முன்மொழிய முடியும். எனினும் ஒரு வேட்பாளர் ஒரு பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படின், ஏனைய பதவிக்காக அவருக்குக் கிடைக்கப் பெற்ற வாக்குகளை கணக்கிலெடுக்கலாகாது. இந்த நியதிச் சட்டக் கோவையை அமுல்படுத்தும் போது கௌரவ சிரேஷ்ட உப தவிசாளர், உப தவிசாளர், கௌரவ சம செயலாளர், கௌரவ பொருளாளர், உப பொருளாளர் போன்ற அனைத்துப் பதவிகளுக்காகவும் வழங்கப்பட்ட வாக்குகள் மேற்குறித்த பதவி ஒழுங்குமுறையின் பிரகாரம் எண்ணப்படல் வேண்டும்.

**18.** சபையின் நிதியாண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியாகும்.

**19.** நிருவாக சபையின் அங்கத்தவர்கள் தாம் தெரிவு செய்யப்பட்ட வருடாந்த மகா சபைக் கூட்டம் நடைபெற்ற திகதியிலிருந்து தமது பதிலாளராக ஒருவரைத் தெரிவு செய்யப்படும் அடுத்த கூட்டத் தொடர் திகதி வரை தமது பதவியை வகித்தல் வேண்டும்.

**20. *(அ)*** சபையின் அங்கத்தவர்களது வருடாந்த மகா சபைக் கூட்டம் வருடத்தின் மாச்சு மாதம் முடிவடைவதற்கு முன்னர் நடாத்தப்படல் வேண்டும். அந்த மகா சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் பின்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(i) நிருவாகக் குழு அலுவலர்கள் மற்றும் தெரிவுக்குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படல்.

(ii) கடந்த வருடத்தின் மகா சபைக் கூட்ட அறிக்கை, வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று என்பவற்றை அங்கீகரித்தல்.

(iii) விதிமுறைகளின்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்.

*(ஆ)* வருடாந்த மகா சபைக் கூட்டம் மற்றும் ஏனைய கூட்டங்கள் நடாத்தப்படும் திகதி, நேரம், இடம் என்பவற்றை பத்து நாட்களுக்கு முன்னராக அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் வேண்டும்.

*(இ)* வருடாந்த மகா சபைக் கூட்டம் வருடத்தின் மார்ச் மாத இறுதிக்குள் நடாத்தப்பட முடியாமற் போகும் பட்சத்தில், சபையின் அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்வதற்காக இக்கோவையின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சபையின் விசேட மகா சபைக் கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும்.

*(ஈ)* வருடாந்த மகா சபைக் கூட்டத்திற்குப் புறம்பாக அங்கத்தவர்களின் மகா சபைக் கூட்டங்கள் மூன்றினை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*(உ)* 20 (இ) பிரிவில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் தேசிய அல்லது சர்வதேச ரீதியாக தொற்று நோய் நிலைமை உருவாகுமாயின், இடர்கால நிலைமை காரணமாக குறித்த காலப்பகுதிக்குள் உரிய வருடாந்த மகா சபைக் கூட்டங்களை நடாத்த முடியாமற் போகும் பட்சத்தில், அக்காலப்பகுதியைத் தவிர்த்து நிலைமை சகஜநிலைக்கு வந்த பின்னர் எதிர்வரும் வருடத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உரிய வருடாந்த மகா சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

அவ்வாறில்லையேல், சபையின் கூட்டங்களை நேர்முகமாக நடாத்த முடியாத சந்தர்ப்பத்தில் தொலைதூர இணையத் தொழில்நுட்ப முறையினூடாக கூட்டங்களை நடாத்த முடியும்.

*(ஊ)* எனினும் அக்கூட்டத்திற்குரிய அனைத்து விடயங்களும் வழமை போல நடாத்தப்பட்டதெனக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது நடைமுறையிலுள்ள நிருவாக சபையின் உத்தியோகபூர்வ காலத்திற்குரிய மகா சபையைக் கூட்டி, நிருவாக சபையொன்று நியமிக்கப்படும் வரை ஏற்கெனவேயுள்ள உத்தியோகபூர்வ பதவிகள் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் வருடாந்த அங்கத்துவ சந்தாப் பணம் அறவிடல் 20 (உ) பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுத்துவதில் இடையூறு ஏற்படலாகாது.

**21. (அ)** கௌரவ தவிசாளரின் கட்டளைப்படி அல்லது கூட்டிணைந்த அங்கத்தவர்கள் பதினைந்து பேரின் கையொப்பத்துடனான எழுத்து மூலக் கோரிக்கை ஒன்று முன்வைக்கும் சந்தர்ப்பமொன்றில், தவிசாளரால் நிச்சயித்து அறிவிக்கப்பட்டுள்ள அல்லது எழுத்து மூலமான கோரிக்கையில் நிச்சயித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தொடர்பாக கருத்திலெடுத்துக் கொள்ள வேண்டியிருப்பின், அங்கத்தவர்களின் விசேட சபைக் கூட்டமொன்று கௌரவ சம செயலாளரால் கூட்டப்பட வேண்டும்.

*(ஆ)* அவ்வாறான கூட்டம் நடைபெறும் திகதி,நேரம், இடம் என்பனவும், கூட்டத்திற்கான நிலைமை தொடர்பாகவும் குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் வேண்டும்.

**22. (அ)** சபையின் அங்கத்தவர்களது அனைத்துக் கூட்டங்களின் போதும் கௌரவ தவிசாளர் தலைமை தாங்கியிருத்தல் வேண்டும். அவர் சமுகமளித்திராவிடில், அண்மித்த முன் தவிசாளர், சிரேஷ்ட உப தவிசாளர், உப தவிசாளர் ஆகியோரில் ஒருவர் தலைமை தாங்கலாம். அவர்களும் சமுகமளிக்காத பட்சத்தில் அங்கத்தவர்களால் நியமிக்கப்படும் நிருவாக சபையின் மற்றுமொரு அங்கத்தவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்க முடியும்.

*(ஆ)* சபை அங்கத்தவர்களின் கூட்டமொன்றிற்கான குழும எண்ணிக்கை கூட்டிணைந்த அங்கத்தவர்கள் எண்ணிக்கையின் நான்கில் ஒரு பங்கானதாக இருத்தல் வேண்டும். கூட்டம் நடாத்தப்பட வேண்டிய நேரத்திலிருந்து அரை மணித்தியாலத்தினுள் குழும எண்ணிக்கை பூர்த்தியாகாவிடில், கூட்டம் பிற்போடப்படல் வேண்டும். அவ்வாறு பிற்போடப்பட்ட நாளன்றும் அரை மணித்தியாலத்தினுள் குழும எண்ணிக்கை பூர்த்தியாகாவிடில், சமுகமளித்திருக்கும் எண்ணிக்கை குழும எண்ணிக்கையாக அமையும்.

*(இ)* கூட்டிணைக்கப்படாத அங்கத்தவர்கள் அனைத்துக் கூட்டங்களிலும் சமுகமளித்திருக்க முடியுமெனினும், இங்கு பன்னிரண்டாம் பிரிவின் பிரகாரம் அவர்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை உண்டு.

**23. (அ)** நிருவாக சபையினால் ஆராய்ச்சி உப குழுவொன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன், நிருவாக சபையின் நோக்கங்கள் மற்றும் சபைக்குரிய செயற்பாடுகள் அல்லது அங்கீகாரம் பெற்ற வேறு ஏதேனும் விசேட விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கும், ஒத்துழைப்பு வழங்குவதற்கும் தகுதியானதென சபை தீர்மானிக்கும் விதத்திலான மற்றுமொரு சபை, குழு, உப செயற்குழு என்பவற்றையும் நியமிக்க முடியும்.

*(ஆ)* சட்டத்தின் 3(அ), (ஆ) மற்றும் (உ) என்னும் பிரிவுகளின் பிரகாரம்மாணவர்களின் தொல்லியல் கல்வி, பரீட்சைகளை நடாத்துதல், அவற்றிற்குரிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்ச்சி உப குழு செயலாற்றுதல் வேண்டும். சபையின் தவிசாளர் உத்தியோகபூர்வமாக ஆராய்ச்சி உப குழுவின் அங்கத்தவராக இருப்பார்.

*(இ)* சபையின் அங்கத்துவத்திற்கான தகைமையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய பரீட்சைகளுக்கான பாடநெறிகளை நடாத்துதல், அப்பாடநெறிகளுக்கான பரீட்சைகளை நடாத்துதல், அதியுயர் அங்கத்துவத்திற்கான விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்கும் சுய மதிப்பீட்டறிக்கையைப் பரீட்சித்தல், அதனை அங்கீகரித்தல் போன்ற செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் நிருவாகக் குழுவினால் நியமிக்கப்படுகின்ற தொல்லியல் ஆராய்ச்சிச் சபைக்கு (BARE) கையளித்தல் வேண்டும்.

**24.** தொல்லியல் துறையின் சிறப்பினை மேம்படுத்துவதற்காக அந்தந்த வருடத்தினுள் நிறைவேற்றப்படுகின்ற மிகச் சிறப்பு வாய்ந்த பணிகளுக்காக சபையினால் வருடாந்தம் தங்கப் பதக்கம் வழங்கப்படலாம். அதற்கென சபையினால் அங்கீகரிக்கப்படுகின்ற தகவுதிறன்கள் தொடர்பாக ஆராயப்படல் வேண்டும். (உப அட்டவணை ii)

**25.** இலங்கை தொல்லியலாளர்கள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் அங்கத்தவர் ஒருவர் வெளித்தரப்பினர் ஒருவருக்கு சேவைகளை வழங்கும் போது, தொல்லியல் ஆலோசனைகள் மற்றும் சேவைக் கட்டணமாக பின்வருமாறு உப அட்டவணை iii இன் பிரகாரம் விண்ணப்பிக்க முடியும்.

**26.** ***(அ)*** இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் அதியுயர் அங்கத்தவர்கள், அங்கத்தவர்கள் மற்றும் உதவி அங்கத்தவர்கள் குழுக்களுக்கு உட்சேரும்போது மாத்திரம் உரித்தாக்கப்படுகின்ற "தொல்லியலாளர்" என்னும் சிறப்புப் பெயரைப் பயன்படுத்தும் போது குறித்த பதவிப் பெயரின் நற்பெயரைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவதற்கு அனைத்து தொல்லியலாளர்களும் கடமைப்பட்டுள்ளார்கள். இதற்காக இலங்கை தொல்லியலாளர்கள் சபை 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆந் திகதியன்று நடாத்திய மகா சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட தொல்லியலாளர்களுக்கான ஒழுக்காற்றுக் கோவையின் (Code of Conduct) பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

***(ஆ)*** இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் அதியுயர் அங்கத்தவர்கள், அங்கத்தவர்கள் மற்றும் உதவி அங்கத்தவர்கள் குழுக்களுக்கு மாத்திரம் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள "தொல்லியலாளர்" என்னும் சிறப்புப் பெயரை குறித்த அங்கத்தவர் குழுக்களுக்குரிய நபர்களுக்கு அன்றி வேறு எந்தவொரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

***(இ)*** 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கை தொல்லியலாளர்கள் சபை கூட்டிணைக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள குறித்த சபையின் பெயரைப் பயன்படுத்தி வேறு எந்தவொரு சங்கத்தையும் நிறுவுதல், பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான உரிமைகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தொல்லியலாளர்கள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இல்லாதொழிக்கப்படுகின்றது.

### *அட்டவணை* I

*அங்கத்துவ சந்தாப் பணம் மற்றும் கட்டணங்கள்*

| *அங்கத்துவம்* | *நுழைவுக் கட்டணம்* | *வருடாந்த சந்தாப் பணம்* |
|---|---|---|
| | *ரூ. ச.* | *ரூ. ச.* |
| அதியுயர் அங்கத்தவர் | 2000.00 | 2000.00 |
| அங்கத்தவர் | 1250.00 | 1250.00 |
| உதவி அங்கத்தவர் | 1000.00 | 1000.00 |
| பதிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் | 750.00 | 750.00 |
| மாணவ அங்கத்தவர் | 500.00 | 500.00 |

### *அட்டவணை* II

இலங்கை தொல்லியலாளர்கள் சபையினால் வழங்கப்படுகின்ற தங்கப் பதக்கத்திற்கான தகவுதிறன்கள்

(ii-1) இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
(ii-2) இலங்கைத் தொல்லியலாளர்கள் சபை அங்கத்தவராக இருத்தல்.
(ii-3) குறித்த துறையில் அதிதீவிர ஆராய்ச்சியாளராக இருத்தல்.
(ii-4) தேசிய நற்பணிகளில் ஈடுபட்டவரும் குறித்த சாத்தியக்கூறுகள் சமூகமயமாக்கப்பட்டிருத்தலும்.
(ii-5) ஆராய்ச்சி நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை வெளியிட்டிருத்தல்.
(ii-6) குறித்த துறையில் நவீன அறிவு மற்றும் அகழ்வாராய்ச்சிகளில் முன்னோடியாக இருத்தல்.
(ii-7) அவரது தகவுநிலை ஆய்வுகளானது குறித்த துறையினை ஒரு திருப்புமுனைக்கு இட்டுச் சென்றிருத்தல் மற்றும் ஆராய்ச்சியின் நிலக் குறியீடுகள் சமூகத்தின் பயன்பாட்டிற்கு உகந்ததாக அமைதல்.
(ii-8) துறையில் ஒரு முன்னோடியாகத் திகழ்தல் மற்றும் நற்குணங்கள் கொண்டவராக இருத்தல்.

(ii-9) செயற்றிறன் உள்ளவரும் நியாயமான நேர்மையான குணவியல்புகளில் சிறந்தவராகவும் இருத்தல்.

(ii-10) துறை சார்ந்த விடயங்களுக்குப் புறம்பாக சபையின் அங்கத்தவராகவும், தொழில்சார்பான மதிப்பைப் பெற்றவராகவும் இருத்தல் மேலதிகமான தகைமைகளாகக் கருதப்படும். (உதாரணமாக நூதனசாலை ஆசிரிய சேவை போன்ற)

(ii-11) மேற்கூறப்பட்ட ii -1தொடக்கம்ii -10 வரையான தகவுதிறன்களுக்குப் புறம்பாக இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் தவிசாளர் பதவியை வகித்தவாறு தொல்லியலாளர்கள் சபையினதும், தொல்லியல் துறையின் மேம்பாட்டிற்காகவும் ஆற்றியுள்ள சேவைகளுக்காக இலங்கை தொல்லியலாளர்கள் சபையில் கடந்த வருடங்களில் கௌரவ தவிசாளர் பதவிகளை வகித்தவர்களுக்காகவும் வருடாந்த தங்கப் பதக்கம் வழங்க முடியும்.

**கீழே குறிப்பிட்டுள்ள செயற்பாடுகள் இலங்கை தொல்லியலாளர்கள் சபையினால் உரியவாறு ஏற்புடையதாக்குதல் வேண்டும்.**

(ii -அ) தங்கப் பதக்கம் வழங்குவதற்காக இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் நிருவாகக் குழுவினால் ஒரு தெரிவுக்குழுவை நியமித்தல் வேண்டும்.

(ii-ஆ) தெரிவுக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலை வெளியிடல் வேண்டும்.

(ii- இ) விண்ணப்பதாரிகளிடமிருந்து ஒழுங்குமுறையான வேட்புமனுக்களை கோருதல் வேண்டும்.

(ii- ஈ) முழுமையான உயிர்த் தரவுப் பத்திரத்தின் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(ii-உ) தங்கப் பதக்கம் வழங்கும் பொருட்டு கருத்திலெடுத்துக் கொள்ளும் காலமாக கடந்த மூன்று வருடங்கள் கணக்கிலெடுக்கப்படுவதுடன், அம்மூன்று வருட காலப் பகுதி தொடர்பான மதிப்பீடுகளின் பின்னர் நிருவாக சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களின்படி பதக்கங்கள் வழங்கப்படும்.

(ii- ஊ) தங்கப் பதக்கங்களை வழங்குவதற்காக பெரும்பான்மையான தெரிவுக்குழு அங்கத்தவர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(ii- எ) தெரிவுக்குழுவிற்குக் கிடைக்கப் பெறும் அனைத்துத் தகவல்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பது தெரிவுக்குழுவின் முக்கிய பொறுப்பாகும்.

### அட்டவணை III

அந்தந்த அங்கத்துவத்தைக் கொண்டிருக்கும் அங்கத்தவர்கள் வெளியார் தரப்பிற்காக சேவைகளை வழங்கும்போது தொல்லியல் ஆலோசனைகள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்கள் பின்வருமாறாகும்.

| அங்கத்துவம் | ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான கட்டணம் |
|---|---|
| அதியுயர் அங்கத்தவர் | 5000.00 |
| அங்கத்தவர் | 4000.00 |
| உதவி அங்கத்தவர் | 3000.00 |
| பதிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் | 2000.00 |
| மாணவ அங்கத்தவர் | 1000.00 |

---

**பொருள் கோடல் :**

I **தொடர்ச்சியான அங்கத்துவத்தை** வகித்தல் என்பதன் பொருள் இலங்கை தொல்லியலாளர்கள் சபையினால் நடாத்தப்படும் வருடாந்த மகா சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்தல் மற்றும் அனைத்து அங்கத்தவர்களும் செலுத்த வேண்டிய வருடாந்த அங்கத்துவ சந்தாக் கட்டணங்களை இடைவிடாது தொடர்ச்சியாகச் செலுத்தப்பட்டிருத்தல் என்பதாகும்.

II **தொல்லியல் கல்விச் சபை** (Board of Archaeological Education /BARE) எனப் பொருள்கோடப்படுவது சபையின் அங்கத்துவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நடாத்தப்படும் பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டங்களை நடாத்துதல், குறித்த பாடத்திட்டங்களுக்குரிய பரீட்சைகளை நடாத்துதல்,அதியுயர் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்கும் சுய மதிப்பீட்டு அறிக்கையை பரிசீலித்தல், அவற்றை அங்கீகரித்தல் போன்ற செயற்பாடுகள் யாவற்றையும் மேற்கொள்கின்ற இலங்கை தொல்லியலாளர்கள் சபையின் நிருவாக சபையினால் நியமிக்கப்படுகின்ற விசேட கல்விச் சபையாகும்.

III இங்கு **பட்டப்பின் படிப்புப் பட்டம்** எனப் பொருள் கோடப்படுவது இரண்டு வருட கால கலை முதுமானிப் பட்டம் (MA), விஞ்ஞான முதுமானிப் பட்டம் (MSc), தத்துவமானிப் பட்டம் (MPhil), தத்துவ முதுமானிப்பட்டம் (PhD)போன்ற பட்டங்களாகும்.

IV **தொழில்சார் தொல்லியலாளர்** எனப் பொருள் கோடப்படுவது இலங்கை தொல்லியலாளர்கள் சபை (கூட்டிணைக்கப்பட்ட) சட்டம் 13(1) ஆம் பிரிவு மற்றும் சட்டத்தின் நியதிச் சட்டவிதிக் கோவையின் 26(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் தொல்லியலாளர் என்னும் சிறப்புப் பெயரை வைத்துக் கொள்வதற்கும், எடுத்துக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் (சபையின் அதியுயர் அங்கத்தவர், அங்கத்தவர், உதவி அங்கத்தவர் குழுக்களில் தகைமையுடையவர்) உரித்துடைய அங்கத்தவர்களுக்கு மாத்திரமே என்பதாகும்.

V நிருவாக சபையினால் நியமிக்கப்படுகின்ற **உப செயற்குழு, சபை, அல்லது உப தெரிவுக்குழு** போன்ற பதங்கள் மூலம் பொருள் கோடப்படுவது நிருவாக சபையின் நோக்கங்களுக்காக அல்லது சபைக்குரிய நடவடிக்கைகளுக்காக அங்கீரிக்கப்படுகின்ற ஏதேனும் விசேட விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல், ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக சபையினால் நியமிக்கப்படுகின்ற குழுக்களாகும்.

EOG 03-0024